https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# பட்டினத்தார் பாடல்களின் மெய்ப்பொருளின் இயல்பு

**முனைவர் ர. ஆர்த்தி**
உதவிப்பேராசிரியர்
கற்பகம் உயர்கல்விக் கழகம், கோயம்புத்தூர் -21.

**Abstract**

The philosophies are built on the basis of body, life, God, attachment etc. Exploring life through them opens the door to knowledge. Saiva Siddhanta, a collection of the true thoughts of Saivism, explains the principles of God, Life, and Life in a profound manner. God is the creator of the universe and the cause of everything. The purpose of this article is to understand that the Lord is the root cause of everything, has his own nature, guides the lives, understands the business and works in Pattinathar's songs.

**keywords**

**Faith in God – Omnipresent – Gods love**

**ஆய்வுச்சுருக்கம்**

உடல், உயிர், இறைவன், பந்தபாசம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு தத்துவங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வழியே வாழ்வை ஆராயும்போது அறிவின் வாசல் திறக்கப்படுகிறது. சைவ சமயத்தின் மெய்ஞ்ஞானச் சிந்தனைகளின் தொகுப்பான சைவ சிந்தாந்தம் மிக ஆழமான முறையில் இறை, உயிர், தளைக் கொள்கைகளை விளக்குகிறது. இறைவன் உலகைப் படைத்த கருத்தாவாக, அனைத்திற்கும் காரணனாக உள்ளார். இறைவன் அனைத்திற்கும் மூலகாரணனாகி தனக்கென இயல்புகள் கொண்டு, உயிர்களை வழிநடத்தி, தொழில் புரிந்து செயலாற்றுகிறார் என்பதனை பட்டினத்தார் பாடல்களில் வழி அறிவேதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

கடவுள் நம்பிக்கை – எங்கும் நிறைந்தவன் – அன்பே கடவுள் – இறைவனை அறியாதவர்கள்

**முன்னுரை**

உண்மைப் பொருளை அறிந்தவரே மெய்யுணர்வு உடையோர் ஆவார். உலகில் நிகழும் நிகழ்வுகள் அனைத்தும் இறைவன் செயலாலே என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. இறைவன் என்பவர் யார்? அவரின் தன்மைகள் என்ன? என்பதை விரிவாக அறியும்போது மெய்யறிவின் வாசல் திறக்கிறது. இக்கருத்தைப் பட்டினத்தார் பாடல்களின் அதிகமாகக் காணமுடிகிறது. பட்டினத்தார் சிற்றின்பம் விடுத்து பேரின்பத்தை அடைய பல்வேறு வழிகளைக் காட்டியுள்ளார். அதாவது, மனித வாழ்க்கையில் நோக்கத்தை அறிந்து

செயல்பட அறிவுரைகள் வழங்கியுள்ளார். இறைவனின் இயல்புகள், அவர் எவ்வாறு நம்மை அகப்படுத்திக் கொள்கிறார் என்பதை பட்டினத்தார் பாடல்களில் காண்பதே இக்கட்டுரையின் இன்றியமையாத நோக்கமாக அமைந்துள்ளது.

### கடவுள் நம்பிக்கை

உடல் – செயல் – மனம் – அறிவு – கரு – மாயை – ஆற்றல் என்னும் உணர்வுக் கட்டுக்களைக் கடந்த பின்னரே இறை நிலையை உணர முடியும். இக்கட்டுக்களைத் தமிழ்ச் சைவம் ஆணவம், கன்மம், மாயை என மும்மலமாகக் கூறுகிறது. இவ்வகைக் கட்டுக் களை அறுத்து எறியும் நெறிகளை அறிவுறுத்துவதே உண்மைச் சமயம் ஆகும். இவற்றை உடைத்தெறியும் விடைகளை விளக்குவதே கடவுள் நெறியாகும். மும்மலங் களை அழித்து உண்மை அறிவின்ப இருப்பு நிலையில் என்றும் நிலைத்து இருந்திட உணர்வு உண்மைகளை இயம்புவதே உண்மைக் கடவுள்நெறி. உயிரினில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே 30 என்று திருவாய்மொழி கூறும், இதையே வள்ளலார், உணர்ந்து உணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை31 என்று விளம்புகிறார். தாயுமானவர், ஆராயும் உணர்வு நீ என்றான் ஐயன32; என்று அறிவிக்கிறார். இதன் மூலம் அறிய வேண்டியது மனித உள்ளம் முழுமையாக இறைவனை நினைத்தால் போதுமானது, அவரை அடையை அவரே வழிகாட்டுவர்.

உலகம் என்பது உண்டு எனில் அதை படைத்த இறைவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பர் ஒரு பக்கம், அதற்கு மாறாக, உலகத்தைப் படைக்கவோ இயக்கவோ ஒரு தனிப்பட்டவரால் இயலாது. உலகு உருவானதும் இயங்குவதும் அதனது இயல்பு. எனவே ஆண்டவன் இல்லை என்பது மற்றோர் பக்கத்தின் கருத்தாக உள்ளது. இதை விளங்கும் விதமாக ஆழ்வார் பாடல்கள் உள்ளன .அதாவது,

**தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே**
**தமருகந்தது எப்பேர்மற்று அப்பேர்-**
**தமருகந்து**
**எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பாரே**
**அவ்வண்ணம் ஆழியானாம்.**

(பொய்கை ஆழ்வார், பாடல்:12)

என்ற பாடலில், எப்படி வேண்டுமானாலும் நினைத்துகொள், எப்படி வேண்டுமானாலும் பெயர் சொல். எந்த வடிவத்தில் நினைத்துப் பார்க்கிறோமோ, அந்த வடிவம்தான் கடவுள் என்கிறார் பொய்கை ஆழ்வார். இதில் மூலம் அறிய வேண்டியது கடவுளுக்கு எத்தனை பெயர்கள் இருந்தாலும் (சிவன், திருமால், முருகன், சக்தி, லட்சுமி), எப்படி உருவப்படுத்திப் பார்த்தாலும் அவரவர் தங்கள் அறிவு அறியும் வகையில் கடவுளைக் காண்கிறார்கள். கடவுள் தேவையில்லை என்று சொல்பவரையும்,

**உளன் எனில் உளன் அவன் உருவம்**
**இவ்உருவுகள்**
**உளன் அலன் எனில் அவன் அருவம்**
**இவ்அருவுகள்** (திருவாய் மொழி பாடல்.1:1-3)

என்று நம்மாழ்வார் இறைவன் உள்ளான் என்றால் உள்ளான். உளனலன்(இல்லை) என்றால் இல்லை. உள்ளவனாகவும், இல்லாதவனாகவும் ஒழிவில்லாமல் எங்கும் பரந்துகிடக்கிறான் என விளக்கமளிக்கிறார். இவ்வாறு கடவுள் உணர்வை உணர்ந்து அருளாளர்கள் பலர் தம்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர்.

### எங்கும் நிறைந்தவன்

இறைவன் நமக்குள் பரந்து விரிந்து இருக்கின்றான். கடவுளை உணர்ந்தவன் பேரின்பத்தை அடைகிறான். உடலும் உயிரும் தனியாக இருக்கிறது ஆனால் இதன் உள்ளே இறைவன் இருப்பது உண்மை இதை கண்டறிந்தால் உண்மையான அழகை அறியமுடியும். இதனையே பட்டினத்தார்,

**உள்ளும் புறம்புமாய் உடலுக்குள் நீ இருந்தது**
**என் அளவு நான் அறியாது இருந்தேனே**
**பூரணமே** (பட்டினத்தார் பாடல். 539)

என எங்கும் நிறைந்துள்ள இறைவா! எனது உடலின் உள்ளும், புறமும் என எல்லா இடங்களிலும், நீயே நிறைந்து இருந்ததை

நான் எள்ள அளவும் கூட, அறியாமல் இருந்துவிட்டேன் என தனது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். இதன்மூலம் இறைவன் என்றும் நம்முடன் உறைந்தே இருக்கின்றான். அவனும் நாமும் வேறல்ல என்பதை அறியமுடிகிறது.

## அன்பே கடவுள்

அன்புதான் நம்மை சிற்றின்பத்தை விட்டு பேரின்பமான இறைவனை அடைய சிறந்த வழியை அடைய உதவுகின்றது.இதே கருத்தினைப் பட்டினத்தார்,

**அன்றுமுதல் இன்றளவும் ஆக்கையொடு சூழ்ச்சியுமாய்**
**நின்ற நிலைஅறிய நேசமுற்றாய் நெஞ்சமே**
(பட்டினத்தார் பாடல்.483)

என்னும் பாடலில் மூலம் வலியுறுத்துகிறார். அதாவது, பிறந்த நாள் தொடங்கி இன்று வரை இந்த உடம்போடு தந்திரமாய் கூடி நிற்கும் இறைவனது நிலையை அறிந்து கொள்வதற்கு அவன் மீது அளவுகடந்த அன்பு வைத்தால் மட்டும் போதும் என்கிறார். சரணாகதி அடைவதன் மூலமாகத் தான் இறைவனைக் காண முடியும் என்பதற்கு மாறாக அன்பினால் கூட இறைவனை உணர்ந்து காணமுடியும் என்பதை அன்பே கடவுள் என்னும் தலைப்பில் அறியமுடிகிறது.

## இறைவனை அறியாதவர்கள்

உடலும் உயிரும் ஒன்றாக இருந்தாலும், இதனைப் படைத்த இறைவனை மறந்து வாழ்வும் வாழ்க்கையை மனிதர்கள் வாழுகின்றார்கள், மேலும் சிற்றின்பத்தை நாடி பேரின்பமான இறைவனை அடையும் வழியே மறந்து இருப்பதே எடுத்துரைக்கிறார். அதாவது, சிற்றின்பத்தை விடுத்து இறைவனை நினைத்து அவரை மனத்தால் துதித்து வாழ்வும் வாழ்கையை பட்டினத்தார் அவர்கள்,

**கருவாய் உருவாய்க் கலந்துஉலகு எலாம் நீயாய்**
**அருவாகி நின்றது அறிகிலேன் பூரணமே**
(பட்டினத்தார் பாடல்.467)

கருவில் இருந்த காலத்தும், உரு எடுத்துப் பிறந்து வாழும் காலத்தும், என எல்லாக் காலங்களிலும், இரண்டறக் கலந்து, உருவமற்று நின்றவன் நீயே என்பதை அறியாமல் இருந்து விட்டேன் என தனது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். இதே கருத்தினை கந்தர் அநுபூதியின்,

**உருவாய் அருவாய், உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**
**கருவாய் வருவாய், அருவாய் குகனே.**
(கந்த அனுபூதி பாடல்.5)

என்று அனைத்துமாய் தமக்குள் இருப்பவன் இறைவன் ஒருவனே என்பதை உணர்த்திரு கிறது. இறைவன் என்றும் நம்முடன் வீற்றிருக்கிறார் என்பதை உணர்த்து செயல் பட வேண்டும் என்பதை இப்பாடல்களில் வழி அறியமுடிகிறது.

## இறைவனுடன் கலந்து நின்றால்

அனைத்தையும் படைத்தவன் இறைவன். முதலும் முடிவும் அற்றவன் என்பது உண்மை. அவர் கண்ணுக்குப் புலப்படா தவன். அவரைக் காண பலகோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவர்தான் இறைவன். அதனை மனிதர்கள் அறியாத ஒன்றாகவே இருக்கிறது. நமக்குள் தான் அவர் வீற்றிருக்கிறார். எங்கு தேடி சென்றாலும் அவரை காண முடியாது, கடவுளை முதலில் உனக்குள் தேடு, அவர் அங்குதான் வசிக்கின்றார்.

**நானே நீ நீயோநானாம் இரண்டும் ஒன்றானால்**
**தேனின் ருசி அதுபோல் தெவிட்டாய் நீ பூரணமே** (பட்டினத்தார் பாடல்.556)

என எங்கும் நிறைந்துள்ள இறைவா! நான்தான் நீ, நீதான் நான், ஆக இரண்டும் ஒன்றாகி விட்டால், தேனின் இன்சுவை போல் நீ தெவிட்டுவது இல்லை என பேரின்பத்தின் சுவை வெளிப்படுத்தியு ள்ளார்.

**நான் என்றும் தான் என்றும் நாடினேன் நாடலும்**

நான் என்றும் தான் என்றும் இரண்டில்லை என்பது

நான் என்ற ஞானமுதல்வனே நல்கினான்

நான் என்ற தானும் நினைப்பொழிந்தேனே

*(திருமந்திரம் பாடல்.2820)*

நான் வேறு அல்ல அவன் வேறு அல்ல இரண்டு ஒன்றை என்ற உண்மையை அந்த ஞான முக்தியினை, எனக்கு இறைவனே நல்கினான். அந்த நிலையில் நான்தான் என்ற எண்ணம் நீங்கப் பெற்று அவனுடன் பிரிப்பின்றி இரண்டறக் கலந்திருந்தேனே என்கிறார் திருமூலர்.

## இறைவனே இறுதியானவன்

இறைவன் படைக்கும் ஒவ்வொரு உயிருக்கும் பொருளுக்கும்; அதன் வினைக்கு ஏற்ப எப்படி முக்தி கிடைக்க வேண்டும் என்பதே அவரே முன்கூடிய முடிவு செய்து வைப்பார். அதன்படிதான் அனைவருக்கும் நடக்கும். அதை மாற்றவோ, அழிக்கவோ முடியாத ஒன்றாகும்.

வழக்கத் தலங்களிலும் மண்பெண்பொன் ஆசையிலும்

பழக்கம் தவிராமல் பதி இழந்து கெட்டேனே

*(பட்டினத்தார் பாடல்.388)*

என பட்டித்தனார் தனது பாடலில் பழகிய இடங்கள், மண், பொன், பெண் ஆகிய இவற்றின் மீது ஆசை கொண்டு, அப்பழக்கத்தைக் கைவிடாமல் உன்னை மறந்து கெட்டு அழிந்தேன் என அழிவுப் பாதைப்பற்றி எடுத்துரைத்துள்ளார். மனிதன் தனது அறியாமையின் காரணமாக பல வினைகள் புரிக்கிறான். இதற்கு ஏற்ப பலன்களை அனுபவிக்கிறான். இருந்தாலும் இதிலிருந்து விடுபட ஒரே வழி இறைவனை அடைவதாகும். இறைவன் மட்டும் வினைகளை அருப்பான். முக்தி என்னும் அமுதம் கொடுப்பானும் இறைவன் மட்டுமே என்ற கருத்தினை இதன்வழி உணர முடிகிறது.

## முடிவுரை

- இறைவன் உலகைப்படைத்த கருத்தா வாக, அனைத்திற்கும் காரணனாக, எதிலும் பற்றில்லாதவராக சிவபெருமான் உள்ளார்.
- இறைவன் அழிவில்லாதவர், என்றும் நிலைத் திருக்கக்கூடியவர். அவருக்கு மூலமும் இல்லை, முடிவும் இல்லை என்பதே பட்டினத்தார் பாடல்களில் அடிதளமாக உள்ளது.
- இறைவன் என்றும் நம்முடன் உறைந்தே இருக்கின்றான். அவனும் நாமும் வேறல்ல என்பதை பட்டினத்தார் பாடல்களில் காணமுடிகிறது.
- சரணாகதி அடைவதன் மூலமாகத்தான் இறைவனைக் காண முடியும் என்பதற்கு மாறாக அன்பினால் கூட இறைவனை உணர்ந்து காண முடியும் என்பதை பட்டினத்தார் பாடல்களில் அறிய முடிகிறது.
- சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை அடைய அன்பே கடவுள் தத்துவமே இக்காலத்தின் தேவையாக உள்ளது என பட்டினத்தார் தமது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.
- இறைவன் நமக்குள் கருவாய், உருவாய், குருவாய் என அனைத்துப் பரிமாணங் களுடன் நம்முடன் வீற்றிருக்கிறார். இக்கருத்தினை பட்டினத்தார் வலியுறுத்து கின்றார் என்பதை இக்கட்டுரையில் அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. கோவேந்தன்.த, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், முற்பதிப்பு-2007.
2. ஞானம், எஸ்.டி , தத்துவ தரிசனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு -2013.
3. சிவஞானம்.வீ , பட்டினத்தார் பாடல்கள் (பத்திரகியார் உட்பட), மூலமும் உரையும், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், இரண்டாம் பதிப்பு-2018.
4. மாணிக்கவாசகர்.ஞா (வி.உ), திருமூலர் திருமந்திரம் மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், முதற்பதிப்பு- 2003.